பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

28 04 2024 7 15

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிஜேபி வெற்றி பெற்று மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றால் பொது சிவில் சட்டம் அமல்படுத்தப்படும் என்று அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

2. மத்தியில் காங்கிரஸ் ஆட்சியமைத்தால் பழங்குடியின மக்கள், ஏழைகள் மற்றும் விவசாயிகளுக்கு பட்ஜெட்டில் சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி கூறியுள்ளார்.

3. மணிப்பூரில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட தேர்தல் நடவடிக்கைகளில் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

4. கம்போடியாவின் மேற்குப் பகுதியில் ராணுவ தளத்தில் உள்ள ஆயுதக்கிடங்கில் ஏற்பட்ட வெடிவிபத்தில் அந்நாட்டைச் சேர்ந்த 20 ராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

5. மலேசியாவில் நடைபெற்ற நீச்சல் போட்டியில் 100 மீட்டர் பேக் ஸ்ட்ரோக் பிரிவில் இந்தியாவின் ஸ்ரீஹரி நடராஜ், தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

பிஜேபி வெற்றி பெற்று மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றால் பொது சிவில் சட்டம் அமல்படுத்தப்படும் என்று அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் பரூச் மற்றும் பஞ்ச்மஹால் பகுதியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு அவர் பேசினார்.

பிஜேபி தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக தீவிரவாத செயல்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

ஏழை மற்றும் நலிவுற்ற பிரிவைச் சேர்ந்த மக்கள் உட்பட அனைத்துப் பிரிவினரும் முன்னேற்றம் அடைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் உறுதியுடன் உள்ளதாக அவர் கூறினார்.

<<<<>>>>

மக்களவைக்கு 3ஆம் கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற உள்ள தொகுதிகளில் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

10 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன்பிரதேசங்களைச் சேர்ந்த 94 தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 7ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது

இதில் மொத்தம் ஆயிரத்து 351 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

மகாராஷ்டிர மாநிலம் கோலாப்பூரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய பிஜேபி மூத்த தலைவர்களின் ஒருவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி, பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் ஸ்திரமான நடவடிக்கைகளை தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு கடந்த 10 ஆண்டுகளில் மேற்கொண்டு வந்ததாகக் கூறினார்.

மகளிர் மற்றும் இளைஞர்களின் நலனுக்கு பிஜேபி தலைமையிலான அரசு உயர் முன்னுரிமை அளித்து வந்ததாகவும் அவர் கூறினார்.

மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள கோலாப்பூர் உள்ளிட்ட 7 மக்களவைத் தொகுதிகளுக்கு இந்த வாக்குப்பதிவு நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக கோவாவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர், ஒரே பாரதம் – உன்னத பாரதம் என்பதற்கு உதாரணமாக கோவா மாநிலம் திகழ்கிறது என்று அவர் கூறினார்.

பிஜேபி வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியமைத்தால் வரும் ஆண்டுகளில் 3 கோடி வீடுகள் கட்டப்படும் என்றும், அனைத்து வீடுகளுக்கும் குழாய் மூலம் சமையல் எரிவாயு இணைப்பு ஏற்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

மீனவர்களின் நலன்களை காங்கிரஸ் புறக்கணித்ததாகவும், ஆனால் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு மீனவர்கள் நலனுக்கென தனி அமைச்சகத்தை ஏற்படுத்தியதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

கோவாவில் உள்ள 2 மக்களவைத் தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 7ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

இதனிடையே மகாராஷ்டிர மாநிலம் லத்தூர் மாவட்டத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய காங்கிரஸ் பொதுச்செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி தேசிய ஜனநாயகக் கூட்டணி தலைமையிலான ஆட்சிக் காலத்தில் வேலைவாய்ப்பின்மை மற்றும் பணவீக்கம் ஆகியவை அதிகரித்துள்ளதாக குற்றம் சாட்டினார்.

70 கோடிக்கும் அதிகமானோர் வேலைவாய்ப்பில்லாமல் இருக்கும் சூழலில், மத்திய அரசுப் பணிகளில் 30 லட்சம் பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

காங்கிரஸ் கட்சி வெற்றி ஆட்சியமைத்தால் வேளாண் கருவிகளுக்கான ஜி.எஸ்.டி. வரி நீக்கப்படும் என்று அவர் உறுதியளித்தார்.

விவசாயிகளுக்கான நலன்களைப் பாதுகாப்பதில் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு தோல்வியடைந்துவிட்டதாகவும் திருமதி பிரியங்கா காந்தி குற்றம் சாட்டினார்.

குஜராத் மாநிலம் வல்சாத் மாவட்டத்தில் உள்ள தரம்பூரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், ஏழைகள் மற்றும் பழங்குடியின மக்களுக்கு கடந்த 10 ஆண்டுகால ஆட்சியில் அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக காங்கிரஸ் பொதுச்செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி குறை கூறியுள்ளார்.

காங்கிரஸ் வெற்றி பெற்று ஆட்சியமைத்தால் பழங்குடியின மக்கள், ஏழைகள் மற்றும் விவசாயிகளுக்கு பட்ஜெட்டில் சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று திருமதி பிரியங்கா காந்தி கூறினார்.

இந்நிலையில் 4ஆம் கட்ட தேர்தலில் வேட்புமனுவை திரும்பப்பெற நாளை கடைசி நாளாகும்.

இதனிடையே 8 மாநிலங்களைச் சேர்ந்த 49 மக்களவைத் தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 20ஆம் தேதி நடைபெற உள்ள தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நடைபெற்று வருகிறது.

இதில் உத்தரப்பிரதேசத்தில் 14, மகாராஷ்டிராவில் 13, மேற்குவங்கத்தில் 7, ஒடிசா மற்றும் பீஹாரில் தலா 5, ஜார்கண்டில் 3 தொகுதிகளிலும், ஜம்மு-கஷ்மீர் மற்றும் லடாக்கில் தலா ஒரு தொகுதி அடங்கும்.

<<<<>>>>

மணிப்பூரில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட தேர்தல் நடவடிக்கைகளில் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

பிஷ்ணுபூர் மாவட்டத்தில் உள்ள நரேன்சேனா கிராமத்தை ஒட்டிய மலைப் பகுதிகளில் மத்திய ஆயுதக் காவல்படை மற்றும் மாநில காவல்துறை இணைந்து தீவிர தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த நடவடிக்கையின்போது பயங்கரவாதிகள் ஏற்படுத்தியுள்ள பதுங்கு குழிகள் அழிக்கப்பட்டதாக அவர் தெரிவிக்கிறார்.

இதனிடையே பாதுகாப்புப் படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்திற்கு அம்மாநில முதலமைச்சர் திரு. பைரன் சிங் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டு சமூக வலைதளப் பதிவில், இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

கம்போடியாவின் மேற்குப் பகுதியில் ராணுவ தளத்தில் உள்ள ஆயுதக்கிடங்கில் ஏற்பட்ட வெடிவிபத்தில் அந்நாட்டைச் சேர்ந்த 20 ராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

**Kampong Spu** மகாணத்தில் உள்ள ராணுவ தளத்தில் இந்த வெடிவிபத்து ஏற்பட்டதாகவும், இதில் பலர் காயமடைந்ததாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இந்த விபத்துக்கான காரணம் குறித்த தகவல்கள் எதுவும் தெரியவில்லை என்று மேலும் அந்த தகவல்கள் கூறுகின்றன.

ஆயுதங்கள் ஏற்றி வந்த ட்ரக் முற்றிலும் சேதமடைந்ததாக அந்நாட்டு ராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

<<<<>>>>

நாகை மாவட்டத்தில் மாற்றுப் பயிராக விவசாயிகள் வெண்டை சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறு பயிரிடப்பட்டுள்ள வெண்டைக்காய் சந்தையில் கிலோ ஒன்றுக்கு 40 முதல் 50 ரூபாய் வரை விற்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தூத்துக்குடியில் இருந்து கோயம்புத்தூரை இணைக்கும் வகையில் ரயில் பாதை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர் தரும் தகவல்...

<<<<>>>>

ஒடிஷா மற்றும் மேற்குவங்கத்துக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் கோடை வெயிலின் தாக்கம் மேலும் அதிகரிக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

இதனிடையே ஒடிசாவில் வெப்பத்தின் தாக்கத்தால் மொத்தம் 598 இடங்களில் காட்டுத் தீ ஏற்பட்டதாகவும், இதில் 724 ஹெக்டேர் பரப்பிலான வனப்பகுதி பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அம்மாநில பேரிடர் மேலாண்மை அமைப்பு தெரிவித்துள்ளது.

பீகார், ஜார்கண்ட், கர்நாடகா, கேரளா, ஆந்திரா மற்றும் தமிழகத்துக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளிலும் வெயிலின் தாக்கம் இரண்டு முதல் மூன்று டிகிரி செல்சியஸ் அதிகரிக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதனிடையே தமிழகத்தில் இன்று முதல் 5 தினங்களுக்கு வெயிலின் தாக்கம் 2 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

உத்தரப்பிரதேச மாநிலத்தில் உள்ள 2 மக்களவைத் தொகுதி உட்பட எஞ்சிய தொகுதிகளுக்கு தேர்தலில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர்கள் அடங்கிய பட்டியல் இன்னும் இரு தினங்களுக்குள் வெளியிடப்படும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. கே.சி. வேணுகோபால் தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் உள்ள ரேபரேலி, அமேதி ஆகிய இரு தொகுதிகளுக்கான வேட்பாளர்களை தெரிவு செய்வது குறித்து அக்கட்சியின் மத்திய தேர்தல் குழுக்கூட்டத்தில் நேற்று ஆலோசனை மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

மலேசியாவில் நடைபெற்ற நீச்சல் போட்டியில் 100 மீட்டர் பேக் ஸ்ட்ரோக் பிரிவில் இந்தியாவின் ஸ்ரீஹரி நடராஜ், தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் லக்னோ அணியை வென்றது.

லக்னோவில் நேற்று நடைபெற்ற போட்டியில் முதலில் ஆடிய லக்னோ அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 196 ரன் எடுத்தது.

197 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய ராஜஸ்தான் அணி, 18 புள்ளி 5 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 199 ரன் எடுத்தது.

அந்த அணியின் சஞ்சு சாம்சன் 71 ரன்னும், துருவ் ஜுரல் 52 ரன்னும் எடுத்தனர்.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் பெங்களூரு அணி குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

அகமதாபாதில் நடைபெறும் இப்போட்டி மாலை மணி 3.30க்கு தொடங்குகிறது. மற்றொரு போட்டியில் சென்னை அணி, ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில் நடைபெறும் இப்போட்டி, இன்றிரவு ஏழரை மணிக்கு தொடங்குகிறது.

-------------

சீனாவின் செங்டுவில் நடைபெறும் ஊபர் கோப்பை பேட்மிட்டன் போட்டியில் இந்தியா இன்று சிங்கப்பூரை எதிர்கொள்கிறது.

<<<<>>>>